## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

குடிநீர் திட்டம் - 1999 - 2000 ஆம் ஆண்டில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மான்யத்துடன் கூடிய குடிநீர் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது - சில உள்ளாட்சி அமைப்புகளுக்கு பதிலாக வேறு சில உள்ளாட்சிகளை திட்டத்தில் சேர்த்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி,3) துறை

அரசாணை (இருபதாண்டு) எண்.97 நாள் 4.10.1999

பார்வை

1. அரசாணை (2டி) எண்.19., ந.நி.ம.கு.வ. (நநி.3) துறை, நாள் 18.6.99
2. அரசாணை (2டி) எண்.46, ந.நி.ம.கு.வ (நநி.3) துறை. நாள் 14.6.99
3. நகராட்சி நிர்வாக ஆணையர், நேர்முக கடித எண்.75098/98/குவ2,

   நாள் 18.6.99
4. பேரூராட்சிகள் இயக்குநர், நேர்முக கடித எண்.29776/97/டி1,

   நாள் 23.6.99 மற்றும் 30.6.99

ஆணை

1.8.99 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி.3) துறை. அரசாணை (2டி) எண்.19ல் 1999 - 2000 ஆண்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டருக்குக் குறைவாக குடிநீர் வழங்கப்படும் 12 நகராட்சிகள் மற்றும் 25 பேரூராட்சிகளில் மான்யத்துடன் கூடிய குடிநீர் திட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதியளித்தது.

2. மேற்படி ஆணையில் அனுமதியளிக்கப்பட்ட பேரூராட்சிகளில் ஒன்றான தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஆழ்வார் திருநகரியில், ஏற்கனவே நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்கப்படுவதாகவும், அதற்கு பதிலாக மற்றொரு பேரூராட்சியில் மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளலாம் எனவும் 6.4.99 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் தலைமையில் நடந்த கலந்துரையாடலில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. எனவே, ஆழ்வார் திருநகரி பேரூராட்சிக்குப் பதிலாக வேறொரு பேரூராட்சியை தெரிவு செய்து மேற்படி திட்டத்தில் சேர்க்க தக்க முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்புமாறு பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக்

கொள்ளப்பட்டார். அவரும் தலைஞாயிறு பேரூராட்சியில் அத்திட்டத்தை செயல்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார்.

3. பொன்விழாத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட 12 நகராட்சிகளில் பண்ருட்டி, கடலூர், விழுப்புரம் ஆகிய திட்டங்கள் தனியே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாலும் அவற்றிற்குப் பதிலாக வேறு நகராட்சிகளில் திட்டத்தை செயல்படுத்தக் கருதப்படுகிறது. திருவாரூரில் இத்திட்டத்தை செயல்படுத்த பார்வை இரண்டில் குறிப்பிடப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, திருத்துறைப்பூண்டி. பரமக்குடி, திருவத்திபுரம் ஆகிய மூன்று நகராட்சிகளை இத்திட்டத்தில் சோத்துக் கொள்ளலாமா என நகராட்சி நிர்வாக ஆணையர் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சி இயக்குநர் பரிந்துரைகளை ஏற்று, பொன்விழா குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தத் தெரிவு செய்யப்பட்டு முதலில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட பட்டியலிலிருந்து கடலூர், விழுப்புரம், பண்ருட்டி, தாம்பரம் ஆகிய நகராட்சிகளையும், ஆழ்வார் திருநகரி ஊராட்சியையும் நீக்கவும், திருத்துறைபூண்டி, பரமக்குடி, திருவத்திபுரம் ஆகிய நகராட்சிகளையும், தலைஞாயிறு பேரூராட்சியையும் 1999 – 2000 ஆம் ஆண்டின் மான்யத்துடன் கூடிய பொன்விழா குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கவும் அரசு இவண் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மாலதி,

அரசு செயலாளர்

பெறுநா

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை,5
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை,108
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை,5
முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதியுதவி நிறுவனம், சென்னை.17
உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர், குறளகம், சென்னை,108
ஊரக வளர்ச்சித் துறை, சென்னை.9
மாநில கணக்காயர், சென்னை.18
மாநில கணக்காயர், சென்னை.18 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை,35
மாநில கணக்காயர், சென்னை.35 (பெயரில்)
நகல்: நிதித் துறை, சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (பொது/பே.1) துறை, சென்னை.9

(ஆணைப்படி/அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்